## காலநிலை மாற்ற போராளி விருது

# இந்தியாவின் மர மனிதருக்கு மந்திர்மார்க் பள்ளியில் பாராட்டு

புதுடெல்லி, அக்.14; காலநிலை மாற்ற போராளி விருது பெற்ற இந்தியாவின் மரமனிதர் மாரிமுத்து யோகநாதனுக்கு டெல்லி தமிழ் கல்விக்கழகத்தின் மந்திர் மார்க் பள்ளியில் பாராட்டு விழா நடந்தது.

இந்தியாவின் மர மனிதர் என்று மரியாதையுடன் அழைக்கப்படும் மாரிமுத்து யோகநாதனுக்கு "காலநிலை மாற்ற போராளி(கிளைமேட் வாரியர்) என்ற விருது இந்திய துணை ஜனாதிபதி தன்கரால் நேற்று வழங்கப்பட்டது. அதனைப் பாராட்டி அவரை கவுரவிக்கும் முகமாக டெல்லித் தமிழ்க் கல்விக் கழகத்தைச் சார்ந்த மந்திர் மார்க் பள்ளியில் ஒரு விழாவிற்கு செயலர் இராஜூ ஏற்பாடு செய்திருந்தார்.



டெல்லியில் துணைஜனாதிபதியிடம் காலநிலை மாற்ற போராளி விருது பெற்ற இந்தியாவின் மரமனிதர் மாரிமுத்து யோகநாதன் டெல்லி தமிழ்கல்வி கழகத்தை சேர்ந்த மந்திர்மார்க் பள்ளியில் மரக்கன்று நட்டார்.

அதில் கலந்துகொண்டு மாரி முத்து யோகநாதன் மாணவர்களிடம் உரையாற்றினார்.

பின்னர் அவர் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளையும் நட்டார். அவருடன் விழாவில் டெல்லித் தமிழக் கல்விக் கழகத்தின் தலைவர் சூரிய நாராயணன், செயலர் இராஜூ, பள்ளியின் இணைச் செயலர் ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு மரக் கன்றுகளை நட்டனர். மழை நீர் சேகரிப்புத் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவில் பள்ளியின் மாணவர் தலைவன் சுமித், மாணவியர் தலைவி ஷ்ருஷ்டி ஜெய்ன், உப தலைவன்தேவ் குமார், உப தலைவி ஹிமானி ஜெய்ன் ஆகியோருக்கு அப் பதவிகளுக்கான பேட்ஜ்களை செயலர் இராஜூ அணிவித்தார்.

பள்ளி மாணவர் தலைவனும், தலைவியும் செயலர் முன்பு உறுதி மொழிகளை எடுத்துக் கொண்டனர்.

இது குறித்து செயலர் இராஜூ கூறுகையில்,' மாரிமுத்து யோகநாதன் மிகவும் பாராட்டுதலுக்குரியவர். அவரை கௌரவிக்க வேண்டும் என்பதற்காகவும் மாணவர்களுக்கு அவரை அறிமுகம் செய்து அவரின் பணிகளைப் புரிய வைக்கவும். மாணவர்களிடம் அவரைப் போன்ற ஒரு அகத் தூண்டுதலை உருவாக்கவேண்டும் என்பதற்காகவும் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தோம்' என்று தெரிவித்தார்.

Published by R.M.R. Ramesh on behalf of Kal Publications Private Limited from No. B-70, Gulm